9th August 1966]

ஓரளவுக்கு சட்டத்தில் இடம் இல்லையென்றாலும் ஒரு கன்வென்ஷன் என்ற முறையில் அரிஜனங்களுக்கு கொடுக்கவேண்டும் என்று ஆர்.டி.எ.-க்களுக்கு உத்தரவோ அல்லது சர்குலரோ அனுப்பப் படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: உயர்நீதி மன்றங்களில் இதைப்பற்றி தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன, கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன, அரசாங்கம் இம்மாதிரி செய்வதற் காக ஆர்.டி.எ.-க்களுக்கு உத்தரவு போடுவது முறை அல்ல என்று.

நிலவியல் ஆராய்ச்சி

* 262 கேள்வி:—திரு. எம். எஸ். செல்வராஜன் } கனம் முதல்
திரு. வை. சங்கரன் }
அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் பூகர்ப்ப சர்வே மேற்கொள்ளும்படி, ஐக்ய நாடுகள் சங்க நிபுணர் குழுவினரை நமது ராஜ்ய அரசாங்கம் கேட்டுக்கொண்டதன்பேரில் ஆராய்ச்சி மேற்கொண் டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவர்களது ஆராய்ச்சியின்பேரில் அறிக்கை ஏதேனும் சமர்ப்பித்துள்ளனரா ?

(உ) அவ்வறிக்கையின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The Government have requested the United Nations Special Fund to afford assistance for undertaking intensive geological investigations in the State and they have to take a decision on the request.

(b) & (c) Do not arise.

திரு. எம். எஸ். செல்வராஜன்: ஸார், ஏற்கனவே பூகர்ப்ப சர்வே செய்திருந்தும், இப்போது நடத்துகின்ற சர்வேயில், புதிய கண்டுபிடிப்புக்கள் துலங்குகின்றன. இதிலிருந்து ஏற்கனவே நடத்திய சர்வே குறைபாடு உள்ளது என்று கொள்ளலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் 'டீடெய்ல்ட் இன்வெஸ்டிகேஷன்' முன்பு செய்தது 'ப்ரிமெச்சூர்' என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது.

மின்சார மோட்டார் பம்புகள்

* 263 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963-64, 1964-65 ஆகிய ஆண்டுகளில் திருச்சி மாவட்டம் பெரம்பலூர், முசிரி ஆகிய ஒவ்வொரு வட்டங்களிலுள்ள குடியானவர்களுக்கு எத்தனை மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வாங்குவதற்கு கடன் வழங்கப்பட்டது ?

(இ) வாங்கப்பட்ட பம்பு செட்டுகளில் இதுவரை எத்தனை பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது ?

[9th August 1966

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the Table of the House.

திரு. து. ப. அழகமுத்து : ஸார், இந்த அறிக்கையின்படி, முசிரி, பெரம்பலூர் இந்த இடங்களில் 1963-64-ல் மொத்தம் 638 பம்பு செட்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டு, 579 பம்புசெட்டுகளுக்குத் தான் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1964-65-ல் 1,033 பம்பு செட்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டு இதுவரை 483 பம்புசெட்டு களுக்கு மட்டும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் மின்சார இணைப்புக்கள் காலதாமதம் ஆவதால் பயன் படுத்தாமலேயே இதற்கென்று வாங்கிய கடனைத் திரும்பக் கட்டு கின்ற தவணை வருகின்ற நிலைமையிருக்கிறது. காரணம் ஒரு டிப்பார்ட்மெண்டோடு இன்னொரு டிபார்ட்மெண்ட் கோ-ஆர்டி னேஷன் இல்லாமல் இருக்கிறது. இந்தச் சிக்கலை தீர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு இலாகாவுக்கு இன்னொரு இலாகா வோடு கோ-ஆர்டினேஷன் இல்லை என்று சொல்வது சரியல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மின்சார போர்ட் தலைவரிடம் இதிலுள்ள கஷ்டத்தைப் பற்றியும், காலதாமதத்தையும் எடுத்துச் சொல்லி, இதைத் தவிர்க்க முன் வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். மணி : பெரம்பலூர் வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு கடன் கொடுப்பதை தற்காலிகமாக நிறுத்தியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் அரசாங்கம் கடன் கொடுப்பதற்கு ஏன் தயங்கு கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அழகமுத்து அவர்கள் ஏற்கனவே கொடுத்திருக்கின்ற பம்புசெட்டுகளுக்கே ஏன் மின்சார இணைப்புக் கொடுக்கப்படவில்லை என்று கேட்கிறார்கள். இன்னும் புதிதாக பம்புசெட்டுகள் கொடுத்தால் இந்தக் குறை இன்னும் ஜாஸ்தியாகும். கொடுக்கப்பட்ட மோட்டார்களுக்கு இணைப்பு கொடுத்ததற்குப் பின்னால் கடன் கொடுப்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

சுப்பையா நகர்

*** 264 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம், கிளியனூரை அடுத்த தானமா னியத்தில் சுப்பையா நகர் என்பதொன்றை கனம் சுகாதார அமைச்சர் திறந்து வைத்தது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் முழு விபரம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

---

[a] Printed as Appendix IV on page 991.